**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF THE SESSIONS JUDGE,**
**MAHALIR NEETHIMANDRAM, MADURAI.**

| | |
|---|---|
| Sessions Case | - S.C **No.581/2018** |
| Deposition of witness for | - P.W. 7 |
| Name | -Thiru.Pari |
| Father's Name/ Husband's Name | - |
| Village | - |
| Taluk | - |
| Caste | - |
| Calling | - |
| Religion | - |
| Age | - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **27.09.2023**

**எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 படி அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருமங்கலம் தாலுகா S.பெருமாள்கோவில்பட்டி ஒத்தவீட்டில் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளைத் தெரியும். தங்கப்பாண்டியின் மகள் சிவப்பரியா என்பவர் 04.02.2017ம் தேதி இறந்துவிட்டார். சிவப்பரியாவின் அப்பா தங்கப்பாண்டி புற்றுநோயால் இறந்துவிட்டார். சிவப்பரியாவின் அப்பா உடம்புக்கு சரியில்லாதபோதே எதிரிகள் பெண் கேட்டார்கள். உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் திருமணத்தை சற்று தள்ளிப்போட்டார்கள். தங்கப்பாண்டி இறந்தபின்னர் 07.09.2016ம் தேதி நாகமலைப்புதுக்கோட்டை கே.டி.தனலெட்சுமி திருமண மண்டபத்தில் வைத்து 1ம் எதிரிக்கும் சிவப்பரியாவிற்கும் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு நான் போயிருந்தேன். திருமணத்திற்கு முன்பு பேச்சுவார்த்தையின் போது நான் உடனிருந்தேன். அப்போது திருமணத்திற்கு 30பவுன் நகையும் 3லட்சம்ரூபாய்

சீர்வரிசையும் செய்து கொடுத்தார்கள். திருமணம் முடிந்தபோது விருமாண்டி ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வந்தார். திருமணம் முடிந்து இரண்டு மாதங்கள் நன்றாக வாழ்ந்தார்கள். கடந்த 2016 டிசம்பர் மாதத்தில் விருமாண்டிக்கும் சிவப்பிரியாவிற்கும் இடையே சிறுசிறு மனவருத்தம் வந்ததாக என்னிடம் தங்கப்பாண்டியின் மனைவி பாக்கியலெட்சுமி சொன்னார். சிவப்பிரியாவின் நகையை கொஞ்சம் அடகு வைக்கவேண்டும் என்று சிவப்பிரியாவிடம் விருமாண்டி, அவரின் தந்தை, தாய் பசும்பொன் ஆகியோர்கள் கேட்டார்கள். விருமாண்டியின் தந்தை பெயர் எனக்கு தெரியாது. அதற்கு நாங்கள் இப்போது தானே கல்யாணம் ஆனது கொஞ்சகாலம் போகட்டும் என்று பேசி அனுப்பி வைத்துவிட்டோம். மீண்டும் 26.01.2017ம் தேதி கணவன் மனைவிக்குள் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டு கைகலப்பு ஏற்பட்டு மீண்டும் அம்மாம வீட்டிற்கு சிவப்பிரியா வந்துவிட்டது. மீண்டும் நான், குணசேகரன், விருமாயி, நாகேந்திரன், நாகேந்திரன் மனைவி, ஜோதி மற்றும் சிவப்பிரியா வீட்டை சேர்ந்த நபர்கள் சந்திரா ஆகியோர்கள் மத்தியஸ்தர்களாக இருந்து சிவப்பிரியா தற்போது கர்ப்பம் அடைந்துள்ளார் என்றும் இப்போது எதுவும் பேசவேண்டாம் என்றும் 7வது மாதம் வளைகாப்பு வைத்துவிடுவோம் அப்போது எதுவானாலும் பேசிக்கொள்வோம் தேவையானதை (நகை நட்டுகளை அடகு வைத்து தவணை வட்டிக்கு கொடுப்பது) செய்துவிடுகிறோம் என்று சொல்லி அன்றைய தினமே சிவப்பிரியாவை கணவர் வீட்டோடு அனுபபி வைத்தோம். நாகேந்திரனின் மனைவி பெயர் எனக்கு தெரியாது. அதன்பின் 04.02.2017ம் தேதி சிவப்பிரியா இறந்த செய்தி தான் எங்களுக்கு கிடைத்தது. அதை தெரிந்துகொண்டு நாகமலைப்புதுக்கோட்டை அருகில் உள்ள கீழக்குயில்குடி ஒத்தவீட்டிற்கு நான் சென்றேன். அப்போது சிவப்பிரியா தூக்குபோட்டு இறந்துள்ளதாக அங்குள்ளவர்கள் சொன்னார்கள். பாக்கியலெட்சுமியை நானும்

என் மனைவியும் தேடினோம். சிவப்பிரியாவின் தாயார் மயங்கி விழுந்துவிட்டதாகவும் அதனால் மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டதாகவும் சொன்னார்கள். அங்கிருந்து மருத்துவமனைக்கு சென்றோம் நாங்கள் போய் சேர்ந்தபோது பாக்கியலெட்சுமி சிவப்பிரியா இறந்த வீட்டிற்கு வந்துவிட்டார். அதற்குள் சிவப்பிரியாவின் உடம்பிற்கு அந்த ஊரைச்சார்ந்த நபர்கள் தீ வைத்து எரித்துவிட்டதாக சொன்னார்கள். அப்போது அங்கு 10 நிமிடம் தீவிரமாக வாக்குவாதம் நடந்தது. எல்லாம்நடந்து முடிந்துவிட்டது இனிஎன்ன செய்ய போகிறோம் என்று சொல்லி நானும் என் மனைவியும் அங்கிருந்து கிளம்பிவிட்டோம். டிஎஸ்பி என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எதிரிகள் தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு ”சரி” என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை.